முதன்மை மாவட்ட நீதிமன்றம், திருவாரூர்

O.S No. 12/2023

2025 ம் ஆண்டு ஜீன் மாதம் 03 ம் நாள் செவ்வாய்கிழமை

1969 ம் ஆண்டு இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 44 ன்படி பிரமாணம் செய்விக்கப்பட்டது.

வா.சா. 1

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | S.J.மோகன்குமார் | தந்தை பெயர் | : | சத்யநாராயணன் |
| கிராமம் | : | செருவாமணி | தொழில் | : | |
| வட்டம் | : | நீடாமங்கலம் | வயது | : | 22 |

**முதல் விசாரணை** ( சாட்சியின் அடையாளம் சரிபார்க்கப்பட்டது)

நான் அசல் வழக்கின் வாதி ஆவேன். நான் தாக்கல் செய்துள்ள சாட்சிய பிரமாண வாக்குமூலத்தை படித்து பார்த்துதான் கையெழுத்து செய்துள்ளேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அதில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும். அந்த சாட்சிய நிருபண வாக்குமூலத்தை எனது சாட்சியத்தின் ஒரு பகுதியாக ஏற்குமாறு வேண்டுகிறேன். பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஆவண பட்டியல்படி வா.சா. ஆ.1 முதல் வா.சா.ஆ.21 ஆக குறியீடு செய்யப்படுகிறது. வா.சா.ஆ.2, 6, 16, 17, 18, 19, 20, 21 ஆவணங்கள் 1ம் பிரதிவாதி தரப்பில் குறியீடு செய்ய ஆட்சேபனை செய்யப்பட்டும், வா.சா.ஆ. 2, 6, 19, 20, 21 ஆவணங்கள் 4, 5 பிரதிவாதி தரப்பில் குறியீடு செய்ய ஆட்சேபனை செய்யப்பட்டும், வா.சா.ஆ 2, 6, 16, 17, 18, 19, 20, 21 ஆவணங்கள் AIR 2001 SC 1158 தீர்ப்புரையை பின்பற்றியும், நீதியின் நலன் கருதியும் குறியீடு செய்யப்படுகிறது.

**குறுக்கு விசாரணை.** தற்பொழுது குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.

என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சு பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டி அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

SELVA MUTHU KUMARI

Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2025.06.03 14:54:35 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,

திருவாரூர்.